தமிழ்நாடு முழுவதும் 19 தோழியர் விடுதிகள்!

பெண்களுக்கு சமூக பாதுகாப்பு அளிப்பது 'திராவிட மாடல்' அரசு!

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை விவாதத்தில் – மானாமதுரை ஆ. தமிழரசி பேச்சு!

சென்னை, பிப்.21-

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் மானாமதுரை தொகுதி உறுப்பினர் ஆ. தமிழரசி பேசுகையில் பெண்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிப்பது 'திராவிட மாடல்' அரசு என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் ஆ. தமிழரசி பேசியதாவது:

முதலில் தங்களுக்கு அன்பான வணக்கத்தைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா உறங்கும் திசை நோக்கி அன்போடு வணங்குகிறேன். இம்மாமன்ற பேரவையில் 2006 முதல் 2010 வரை அமைச்சராகவும், தற்போது மீண்டும் 2021 முதல் 2026 வரை சட்டமன்ற உறுப்பினராகவும், இம்மாமன்றத்தில் என் தொகுதியின் சார்பாக எவையெல்லாம் வேண்டுமென்று கேட்டேனோ அவற்றையெல்லாம் அள்ளி தந்த தந்தையாக, என்னுடைய மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்கு அரசு கலைக் கல்லூரி 18 கோடி ரூபாயிலும், ITI தொழில்நுட்பக் கல்லூரி 9 கோடி ரூபாயிலும் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு நிலையம், மானாமதுரை பேரூராட்சி நகராட்சியாக மாற்றப்பட்டது. இரண்டு புதிய பத்திரப் பதிவு அலுவலகம், மகப்பேறு மருத்துவமனை, பள்ளி பிள்ளைகளுக்குத் தேவையான அடிப்படை கட்டட வசதிகள், நகர்ப்புற மருத்துவமனை, சாலை கிராமம் புதிய பேருந்து நிலையம், கீழப்பசலை கானூர் புதிய check dam, cold storage என்று எண்ணற்றத் திட்டங்களை அள்ளி வழங்கிய தமிழ்நாட்டின் தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களுக்கும், வனம் மற்றும் காதித் துறை அமைச்சர் ஆர்.எக. ராஜகண்ணப்பன் அவர்களுக்கும், அவையில் இருக்கும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் சா. மாங்குடி உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என் தொகுதியை சார்ந்த ஒன்றிய கழக, பேரூர் கழக, நகர கழகத்தினுடைய செயலாளர், கூட்டணிக் கட்சியினுடைய தோழர்கள், கழகத்தினுடைய முன்னோடிகள், தாய்மார்கள், அன்பு குழந்தை செல்வங்கள் உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றியமாநில உறவு குறித்த உயர்நிலை குழு அறிக்கையை திராவிட மாடல் அரசின் முதல்வர் அவர்கள் சமர்ப்பித்ததற்கு என்னுடைய நன்றியையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'காட்சிக் கௌியன் கடுஞ் சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்'

எந்த நேரத்திலும் மக்களைச் சந்திக்கத் தயங்காத, எளியோர்க்கு எளியவராக திகழ்பவர் திராவிட மாடல் அரசினுடைய தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள். சூரியன் உதித்து தன் பயணத்தை தொடங்கிய அதே நேரத்திற்கு ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு வங்கி கணக்கில் ரூ.5,000 செலுத்தப்பட்டது. 6,500 கோடி ரூபாய் ஒன்றிய அரசின் நிதி நெருக்கடியைத் தாண்டியும் எந்தவித தடையுமின்றி வழங்கப்பட்டது. மகளிர் குல தங்கங்களோ மகிழ்ச்சி கடலில் தத்தளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தரவுகளின் அடிப்படையில் நிருவாகத்தை வழிநடத்துதல், numbers do not lie எண்கள் ஒருபோதும் பொய்யாகாது. Data Governance AI, Google இணையதளம் உருவாக்கப்பட்டது, உருவான இணையதளத்தில் Amazon, Twitter, Whatsapp, Facebook என்று அவற்றைச் சார்ந்த தொழில்கள் வளர்ந்தன. அன்றைக்கு ஐயா கலைஞர் அவர்கள் கல்வியிலும் உட்கட்டமைப்பிலும் முதலீடுகளை செய்ததினால், 1992லிருந்து உலகமயமாதலில் LPG (Liberalization, Privatization, and Globalization) reform தமிழ்நாடு உலக அரங்கில் வேலைவாய்ப்பில் முன்னிலைப் பெற்றது. இப்போது AI உலகம். Next AI தான் அடுத்தக்கட்ட பாய்ச்சலில் உலகை ஆளப் போகிறது.

திராவிட நாயகர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அதை புரிந்துகொண்டு என்னென்ன திட்டங்களை செயல்படுத்துகிறார். தமிழ்நாடு ஆழ் நிலை தொழில்நுட்பம், புத்தொழில் நிறுவன கொள்கை (Deep Tech Startup Policy) நாட்டிலேயே முதல்முறையாக ரூ.100 கோடியில். Tamil Nadu Technology Hub (India's first emerging Deep Tech Innovation Network), தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், Tamil Nadu Semiconductor Mission 2030, 500 கோடியில் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு அறிவுசார் நகரம் சென்னைக்கு அருகில் 2,000 ஏக்கர் பரப்பளவில் உலகளாவிய நகரம் அமைக்கப்படும். அரசு பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு, அதி நவீன உற்பத்தி திறன் முதலான புதிய பாடப்பிரிவுகள் அறிமுகம். இவற்றையெல்லாம் ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், Data is engine of growth. அதாவது தகவல்களே வளர்ச்சியினுடைய மூலதனம். Data governance இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முன்னோடியாகவும், நம் மாநிலத்தினுடைய எதிர்காலத்தை வடிவமைத்துக் கொண்டிருக்கின்ற திராவிட நாயகர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அதை முன்னெடுத்து சென்றுகொண்டிருக்கிறார்.

பெண் தொழிலாளர்கள் 40 சதவிகிதம்

இந்தியாவில் பெண்களில் வேலைவாய்ப்பு விகிதம் என்பது பல ஆண்டுகளாக 24 முதல் 25 சதவிகிதமாகத்தான் உள்ளது. அதாவது, 100 பெண்களில், 75 பெண்கள் இன்னும் பொருளாதார அமைப்பில் இல்லாமல், பொருளாதாரப் பயனடையாமல் இருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில், பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் என்பது 40 சதவிகிதத்தைத் தாண்டியிருக்கிறது.

பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெறும்வகையில், 1 கோடியே 31 இலட்சம் மகளிருக்கு மாதம் 1,000/ ரூபாய் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் ஏன் முக்கியத்துவம் பெறுகிறது என்பதைப் பார்ப்போம். உலக வங்கியின் ஆய்வறிக்கையில், பெண்களுக்கு நேரடி பண வரவு கொடுக்கின்றபோது, குழந்தை களுக்கான ஊட்டச்சத்தும், கல்விக்கான முதலீடும் அதிகரிக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத்தான் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை தமிழ்நாடு உணர்ந்த அளவிற்கு மற்ற நாடுகள் உணர்ந்தனவா என்று தெரியவில்லை.

ஐயா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்த 1989ல், 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் பெண்களுக்கு உதவித் தொகை தருவதாகச் சொல்லி, அவர்களுக்கு உதவித் தொகை வழங்கி, சமூகப் பாதுகாப்பை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய பாதையில் அடியொற்றி நடந்துகொண்டிருக்கின்ற நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள், புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் 6,93,296 மாணவியருக்கு மாதம் ரூ.1,000/ வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஏற்பட்ட வளர்ச்சி என்ன, வளர்ச்சி விகிதம் என்ன என்றால், கல்லூரிகளில் பெண்களின் சேர்க்கை விகிதமானது 51 சதவிகிதத்தைத் தாண்டியிருக்கிறது. ஆனால், இந்திய அளவில் அந்த சராசரி விகிதம் என்பது வெறும் 28 சதவிகிதம்தான். ஆனால், தமிழ்நாட்டின் சராசரி என்பது 51 சதவிகிதத்தையும் தாண்டி நிற்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் திராவிட மாடல் அரசினுடைய சிந்தனையாக, புதிய யோசனையாக நான் பார்க்கின்றேன்.

பெண்களுக்கு கல்வி கொடுத்தாயிற்று! பெண்களுக்கு கல்வி கொடுத்தாயிற்று! அடுத்து என்ன? வேலைவாய்ப்பு. ஒரு நிறுவனத்திற்கு வேலைக்குச் செல்கின்றபோது, based on demand and supply என்று சொல்வார்கள். சராசரியாக ரூ.25,000/ முதல் ரூ.30,000/ வரை ஆரம்ப கால சம்பளம் கொடுக்கப்படுகிறது. பணிக்குச் செல்கின்ற பெண்கள், அந்த ஆரம்பகால சம்பளத்தில் விடுதியில் தங்குவதற்கும், உணவுத் தேவைக்கும், போக்குவரத்திற்கும் என தன்னுடைய வருமானத்தில் 30 முதல் 40 சதவிகிதத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. அப்போது, பெண் வேலைக்குச் சென்றால், 'நீ சம்பாதிப்பது உனக்கே போதுமானதாக இல்லை; நீ எதற்காக வேலைக்குப் போக வேண்டும்?' என்று கூறி, பெற்றோர்கள் அவர்களைத் தடுப்பதற்கு யோசிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதை பெற்றோரின் மனநிலையில் இருந்து யோசித்து, செயல்படுத்த நினைத்த திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள், சென்னையில் 706 கோடி ரூபாயில், 18,720 படுக்கைகள் கொண்ட மிகப் பெரிய பணியாளர் விடுதியைத் துவக்கியிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் 19 தோழியர் விடுதிகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். பெண்களுக்கு சமூகப் பாதுகாப்பு, சம்பளப் பாதுகாப்பு என்று சொல்லி, பெண்களை ஒருங்கிணைத்துக் கொண்டுவரக்கூடிய அரசாக நம்முடைய அரசு இருக்கிறது. ஒன்றிய அரசாங்கத்தின் பாரதப் பிரதமர் மோடி அவர்கள், இத்தகைய தோழியர் விடுதிகள் இந்தியா முழுவதும் கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். ஆக, தமிழ்நாடு எந்தெந்தத் திட்டங்களை யெல்லாம் துவக்குகிறதோ, அவையெல்லாம் முன்னோடித் திட்டங்களாக, இந்தியாவையே வழிநடத்தக்கூடிய திட்டங்களாக உள்ளன. அவற்றை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

புதிய விடியல் பயணத் திட்டம்!

பெண்கள் வேலைக்குச் செல்கின்றபோது, பயணச் செலவுகள் ஏற்படுகின்றன. அவ்வாறு பயணத்திற்கு ஆகின்ற செலவைக் குறைக்க, புதிய விடியல் பயணத் திட்டம். அதன் மூலமாக பெண்கள் 881 கோடி முறை பயணம் செய்திருக்கிறார்கள். இதனால் ஒரு பெண்ணிற்கு ஏற்படும் மாத சேமிப்பு என்பது ரூ.888/ ஆகும். ஆக, பணிபுரியும் பெண்களுக்கு ஒரு மாதத்தில் பயணச் செலவில் ரூ.888/ சேமிப்பு கிடைக்கிறது.

அடுத்து, பெண் பணியாளர்கள். அவர்கள் வேலைக்குச் செல்கிறார்கள். விடுதிகளில் தங்குகிறார்கள். பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு என்று வருகின்றபோது, 'குழந்தை பெற்றபின் நீ வேலைக்குச் செல்ல வேண்டாம்; வீட்டில் இரு' என்று குடும்பத்தினர் சொல்கிறார்கள். எனவே, எந்தவகையிலும் பெண்கள் வேலைக்குச் செல்வது தடைபட்டுவிடக் கூடாது என்பதற்காக ஊதியத்துடன்கூடிய 12 மாத மகப்பேறு விடுப்பை வழங்கிய ஒரே முதலமைச்சர் முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒன்றிய அரசாங்கத்தின் பாரதப் பிரதமர் மோடி அவர்களோ வெறும் 26 வாரங்கள் விடுப்பு மட்டுமே தருகிறார்கள். அதாவது, 6 மாதங்கள் மட்டும்தான் பெண்களுக்கான மகப்பேறு விடுப்பு தரப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்தான் ஊதியத்துடன்கூடிய மகப்பேறு விடுப்பு 12 மாதங்கள் வழங்கப்படுகிறது. அதேபோல் குழந்தை பெற்றுக்கொண்டபின், அவர்கள் வேலை பார்க்கும் இடத்திலேயே குழந்தைகளைப் பராமரிப்பதற்கான காப்பகங்கள் உருவாக்கப்படுகின்றன.

இன்றைய காலகட்டம் என்பது, ஆணும், பெண்ணும் சமமாக வேலைக்குச் செல்லக் கூடிய சூழ்நிலை. பெண் வேலைக்குச் செல்வதில் எத்தனையோ தடைகள் உருவாகின்றன. அந்தத் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து, பெண் வேலைக்குச் செல்ல வேண்டும். அவளுடைய எண்ணங்களையும், கனவுகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணக்கூடியவர் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அதனால்தான் அவர்களுக்கு கல்வி கொடுக்கப்பட்டது. அந்தக் கல்விக்கு ஏற்ற கனவுகள் கொடுக்கப்பட்டது. அந்தக் கனவுகளுக்கு ஏற்ற வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டது. அந்த வேலையைத் தக்கவைப்பதற்கான திராவிட மாடல் அரசு எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுக்கிறது. இது எதுவுமே யோசிக்காமல் வந்ததில்லை, இது எதுவுமே யோசிக்காமல் வந்ததில்லை. பெண்களைப் பற்றி ஒரு தாயாக, ஒரு தந்தையாக, ஒரு முதலமைச்சர் யோசித்த காரணத்தினால் இத்தனைத் திட்டங்களை அடுக்கடுக்காகத் தந்திருக்கிறார்கள். இதனுடைய உள் நோக்கம் என்ன? பெண்கள் ஆளுமை நிறைந்தவர்களாக இந்த மண்ணில் சுயமரியாதையோடு வளம் வர வேண்டுமென்று எண்ணக் கூடியவர் திராவிட மாடல் அரசினுடைய எங்களுடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுக்கு பெண்களாகிய நாங்கள் என்றைக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இம்மாமன்றத்தில் நான் ஒன்று சொல்லவருவது, எங்களுடன் சண்டை போடுகிறீர்களா? எங்களுடன் போட்டி போட வேண்டுமா, அதிகாரத்தால் அல்ல, அறிவால் போட்டி போடுங்கள். அறிவால் எங்களைத் தொட்டுப் பாருங்கள். எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், எங்கள் முன்னே நிற்கிறார்கள். தந்தை பெரியாராக, பேரறிஞர் அண்ணாவாக, அய்யா கலைஞராக எங்கள் முன்னால் நிற்கிறார்கள் நம் முதல்வர் அவர்கள். எங்களுடைய முதல்வர் அவர்கள், எந்தவொரு அரசு நிகழ்ச்சியிலும், எந்த ஒரு தளத்திலும் அவர் சொல்லத் தவறாத ஒரு வார்த்தை, அவரின் ஆழ்மனதிலிருந்து வெளிப்படும் ஒரு வார்த்தை, 'நல்லா படிங்க, நல்லா படிங்க, என்ன வேண்டுமானாலும் படிங்க, நான் இருக்கிறேன், உன் தந்தையாக, உன் தாயாக நீ படித்து உன் வீட்டிற்கும், இந்த நாட்டிற்கும் பெருமை சேர்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று என் தலைவனின், என் முதல்வனின் உள்ளத்து வார்த்தை அது. அந்த வார்த்தைக்கு—இன்றைக்கு எத்தனையோ திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கல்வியில் சிறந்தது தமிழ்நாடு, வெற்றி நிச்சயம், வெல்லும் தமிழ்ப் பெண்கள் எனப் பல நிகழ்ச்சிகளில் படிப்பால், திறமையால் உயர்ந்தவர்களை மேடையேற்றி அழகு பார்த்தவர் எங்களுடைய முதலமைச்சர் அவர்கள்.

அறிவை விரிவு செய்; அறிவை விரிவு செய். முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம், 31 ஆயிரம் பள்ளிகளுக்கு இல்லம் தேடிக் கல்வி, புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், கல்லூரிக் கனவு, எண்ணும் எழுத்தும், நான் முதல்வன், உயர் கல்வியில் சமூக நீதியை நிலைநாட்ட 7.5 சதவிகித இட ஒதுக்கீடு

54,301 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி மற்றும் உணவுக் கட்டணங்களை அரசே ஏற்று இதுவரை 1,512 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஆ. தமிழரசி: மாணவர்களுக்குத் தமிழ்ப் புதல்வன், கல்லூரிக் கனவுத் திட்டத்தில் 2,68,000 மாணவ, மாணவிகள் பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். நான் முதல்வன் திட்டத்தில் 48,65,050 திறன் சார்ந்த மாணவர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். வெற்றி நிச்சயம் என்ற திட்டத்தின் மூலமாக 16,815 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 70,500 பேர் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றனர். குடிமைப் பணித் தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்களது வெற்றியை உறுதி செய்ய 7,500 ரூபாய் உதவித் தொகை. உலகப் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்களில் கல்வி கற்க பட்டியல் இன மாணவ, மாணவியர்களுக்கு அண்ணல் அம்பேத்கரின் உயர் கல்வி திட்டத்திற்கு 160 கோடி ரூபாய் ஒதுக்கீடு. ஆக இவையெல்லாம் மாணவர்களுடைய, பெண்களுடைய கல்வி வளர்ச்சிக்கு எங்களுடைய முதல்வர் அவர்கள் வகுத்துத் தந்த திட்டங்கள்.

கலைஞர் நூற்றாண்டு நூலகம்

கலைஞர் நூற்றாண்டு நூலகம். தமிழ்நாடு முழுவதும் புத்தகத் திருவிழாக்கள். தந்தை பெரியார், 'அறிவே மனிதனை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்' என்றார். அவர் வழியில் எங்களுடைய திராவிட மாடல் அரசு (மணியடிக்கப்பெற்றது) இளைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்த விளையாட்டுத் துறையின்மூலமாக உலக அரங்கில் நிலைநாட்டியவர் எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டி 101 கோடி ரூபாய் பரிசுத் தொகை. எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தில் முதன்முதலில் துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். நாடே வியந்த செஸ் போட்டி, உலகக் கோப்பை ஹாக்கி போட்டி, இப்படி எண்ணற்ற போட்டிகள். விளையாட்டே உலகை மாற்றும். விளையாட்டே உலகை மாற்றும் சக்தி உடையது என்று நெல்சன் மண்டேலா அவர்கள் சொன்னார்கள். அவர் பாதையில் எங்களுடைய துணை முதலமைச்சர் அவர்கள் இன்று பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். வளர்ந்த நாடுகளான சீனா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற எந்த நாடுகளை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். திறமையான உள்ளாட்சி நிர்வாகமே அந்த நாடு வலிமையான நாடு என்று நிரூபித்துள்ளது. வலிமையான நாட்டிற்கு வலிமையான உள்ளாட்சி அமைப்புகள் தேவை. அதனால்தான் சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற உள்ளாட்சி மேயர் தேர்தலில் அதிபர் தேர்தலுக்கு நிகராக உள்ளாட்சித் தேர்தல் பேசப்பட்டது. அதனடிப்படையில் அண்ணல் அம்பேத்கருடைய கூற்று என்பது 'சமுதாய சமத்துவம் இல்லாமல் அரசியல் ஜனநாயகம் நிலைக்காது'. அவ்வளவுதான், முடிக்கப்போகிறேன். ஒரு மனிதனை சக மனிதனாக எவ்விதப் பாகுபாடின்றி அப்படியே ஏற்றுக் கொள்வதில் தான் உள்ளது என்று சொன்னார். நாட்டிலேயே முதன்முறையாக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளை உறுப்பினர்களாக நியமிக்க சட்டத்திருத்தம் கொண்டு வந்த ஒரே முதலமைச்சர் இந்தியாவில் திராவிட மாடல் அரசினுடைய முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு 3,632 நியமன மாற்றுத் திறனாளிகள் திராவிட மாடல் அரசில் உள்ளாட்சி அமைப்புகளில் அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உங்கள் வீட்டில் எங்கள் அரசு, உங்கள் வீட்டில் எங்கள் அரசு, அரசுக் கட்டடங்களில் மட்டும் இருந்தால் அது நிர்வாகம். ஆனால், மக்கள் வாசல் நின்றால் அதுதான் நல்லாட்சி. மக்கள் அரசினுடைய கதவைத் தட்டிக் கொண்டிருந்த காலத்திற்குப் பதிலாக, இன்று அரசு மக்களுடைய வாசல் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது.

அரசின் நடவடிக்கைகளால், இன்றைக்கு எண்ணற்ற திட்டங்கள் மக்களைத் தேடிச் சென்றுகொண்டிருக்கின்றன. சிறு குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற கர்ப்பவாய்ப் புற்றுநோய் என்பது 14 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு இந்தியாவிலேயே முதன்முதலாக HPV தடுப்பு நோய் மருந்தைப் போட்டது நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். ஒரு தனியார் மருத்துவமனையில் இந்த மருந்தை எடுத்துக் கொண்டோம் என்றால், சுமார் 28,000 ரூபாய் செலவாகும். ஆனால், மக்களைத் தேடி, இந்த மருத்துவத்தைக் கொண்டுசேர்த்தவர் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் .

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அய்யா கலைஞர் அவர்களுடைய கொள்கை வாரிசாக தன் சிந்தனையாலும், செயலாலும், தன் உழைப்பாலும் தமிழ் நாட்டை வடிவமைத்துக் கொண்டிருக்கும் நம் திராவிட மாடல் அரசினுடைய முதல்வர், அடுத்து அமையவிருக்கும் பெண்களுக்கான ஆட்சி 2.0 ஆட்சி, இது நம்ம ஆட்டம். 2026 ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்; மீண்டும் ஸ்டாலின் தொடரட்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு வெல்லட்டும்; மீண்டும் ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்

தொகுதி கோரிக்கையில்; நிலையூர் முக்குடிகம்பிக்குடி கால்வாயினைத் தூர்வாரி வைகை ஆயக்கட்டோடு சேர்க்க வேண்டும், மதுரைதனுஷ்கோடி சாலை மற்றும் மானாமதுரைபரமக்குடி சாலையை இணைக்க வேண்டும், துப்பாக்கி கவுண்டருக்கு சிலை வைத்து அரசு நிகழ்ச்சியாக அனுசரிக்க வேண்டும் மதுரைதனுஷ்கோடி சாலை மற்றும் மானாமதுரைபரமக்குடி சாலையை இணைக்கும் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும்.

அரசு பொறியியல் கல்லூரி, இளையான்குடி. மானாமதுரைசிப்காட் வளாகத்தில் அதிகளவில் தொழிற்சாலைகளைக் கொண்டுவர வேண்டும்.

மானாமதுரையில் மண் பாண்டத் தொழிலாளர்களுக்கு சந்தைப்படுத்தும் மையம் அமைக்க வேண்டும்.

திருப்புவனம், மானாமதுரை, இளையான்குடி பகுதிகளில் உழவர் சந்தை அமைக்க வேண்டும்.

இளையான்குடி பிராமணக்குறிச்சிகமுதக்குடி வழியாக பரமக்குடி செல்வதற்கு வைகையாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும்.

திருப்புவனம் மடப்புரம் அருள்மிகு பத்திரகாளியம்மன் கோயில் செல்வதற்கு சுற்றுச் சாலை அமைக்க வேண்டும்.

மானாமதுரையில் சுய உதவிக் குழு தயார் செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தும் மையம் மற்றும் அவர்களுக்கான பயிற்சி அளித்தல் மையம் அமைக்க வேண்டும்.

இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம் மருத்துவமனைகளை அதிக படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரமுயர்த்த வேண்டும்.

திருப்புவனத்தில் உண்டு, உறைவிடத்துடன்கூடிய போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் அமைக்க வேண்டும்.

மானாமதுரையில் சிப்காட், அண்ணா சிலை, பழைய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும்.

திருப்புவனத்தில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

இளையான்குடி வட்டம், சாலை கிராமத்தை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்க வேண்டும்.

மானாமதுரையில் வைகையாற்றினை பலப்படுத்தி நடைபயிற்சிக்கான சாலைகள் அமைக்க வேண்டும்.

இவ்வாறு ஆ. தமிழரசி பேசினார்.